## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியக்தினதும் (''பணியகம்'') பணியகம் மற்றும் அதன் துணைக்கம்பனியினதும் (தொகுதி) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கை தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து பணியகம் மற்றும் தொகுதியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகம் மற்றும் தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகம் மற்றும் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பணியகம் மற்றும் தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகம் மற்றும் தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகம் மற்றும் தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகம் மற்றும் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பணியகம் மற்றும் தொகுதியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பணியகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பணியகம் மற்றும் தொகுதி இணங்கியிருந்ததா என்பதும்,

- பணியகம் மற்றும் தொகுதி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பணியகம் மற்றும் தொகுதியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்தம் சொத்துக்களை சரிபார்க்கும் வகையில் பணியகத்தின் நிலையான சொத்துக்களை சரியாக குறியீடு இடும் செயன்முறை 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட்ட | 2024 ஆம் ஆண்டில் பணியகத்தின் நிலையான சொத்துக்களை சரியாக குறியீடு இடும் செயன்முறையை பூர்த்தி செய்து அவற்றை | பணியகத்தின் அனைத்து சொத்துக்களும் முறையாக குறியீடு இடப்பட்டு |

| | | |
|---|---|---|
| போதிலும் ஒரு மையப்படுத்தப்பட்ட நிலையான சொத்து பதிவேடு தயாரிக்கப்படவில்லை. எனவே, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 4,308.58 மில்லியன் தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பௌதீக ரீதியான இருக்கும் தன்மை தொடர்பில் கணக்காய்வின் போது திருப்தி அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | கணக்குகளில் பதிவுசெய்வதற்கு உத்தேசித்துள்ளோம். | நிலையான சொத்து பதிவேடுகளில் பதிவுசெய்யப்பட வேண்டும். |

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை

| | குறிப்பிட்ட நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்ட நியமம் – 01 இன் 27 மற்றும் 28 ஆம் பந்திகளுக்கு முரணாக பணியகம் நிதிக்கூற்றுக்களில் காசு அடிப்படையில் பெறவேண்டிய அல்லது செலுத்த வேண்டிய வற் மீதியை காட்டியிருந்தது. | காசு அடிப்படையில் வற்றை செலுத்துவதற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் CECB அங்கீகாரத்தை பெற்றுள்ளதால், CECB கொடுப்பனவு அல்லது பெறுவனவின் போது வற்றை பதிவு செய்கிறது. | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் பணியகத்தால் பெறப்பட்ட 2025 யூன் 15 இல் முதிர்ச்சியடையும் ரூபா 246.99 மில்லியன் பெறுமதியான திறைசேரி பிணைமுறிகள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் 09 நிதிக் கருவிகள் நியமத்தின் பிரகாரம் உரிய ஆண்டில் நியாயமான பெறுமதியில் இனங்காணப்படவில்லை. மேலும் குறித்த கணக்கீட்டு பிழை இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) – 08 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டில் கணக்குகளில் பின்னோக்கி சீர்செய்யப்பட்டு இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் இறுதியில் சீர்செய்யப்பட வேண்டிய வட்டி ரூபா 0.78 மில்லியன் ஆக இருந்ததுடன் இது ஒரு முக்கியமற்ற பெறுமதியாகும். | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பணியகத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட கலப்பு விவசாய செயற்திட்டத்திற்குச் சொந்தமான ரூபா 17.28 மில்லியன் பெறுமதியான உயிரியல் சொத்துக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றில் சரக்கிருப்பில் காட்டப்பட்டுள்ளன. எனினும் அந்த | கருத்துரை பெறப்பட்டிருக்கவில்லை. | மூலதன சொத்துக்கள் சரக்கிருப்பு சொத்துக்களிலிருந்து தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட |

| | |
|---|---|
| பெறுமதியில் ரூபா 11.26 மில்லியன் காணி மற்றும் மூலதனச் செலவுகள் மற்றும் ரூபா 0.17 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் சேர்க்கப்பட்டன. | வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| | விடயம் | நிதிக்கூற்றின் பிரகாரம் ரூபா மில்லியன் | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா மில்லியன் | வேறுபாடு ரூபா மில்லியன் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | வியாபார கடன்கொடுத்தோர் | 1,299.37 | 1,286.66 | 12.71 | 2023 இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது, துணைக்கம்பனியால் (சென்ட்ரல் எஞ்ஜினியரிங் சேர்வீசஸ் பிறைவேட் லிமிட்டட்) சில விலைப்பட்டியல்கள் பதிவு செய்யப்படவில்லை. CECB மீதி சரியாக உள்ளதுடன் தொடர்புடைய அட்டவணைகள் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது துணைக்கம்பனிக்கும் தாய் கம்பனிக்கும் இடையிலான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பணம் | 2,080.10 | 2,027.33 | 52.77 | | |
| (இ) | நானாவித கடன்கொடுத்தோர் | 0 | 13.30 | 13.30 | | |
| (ஈ) | செலுத்த வேண்டிய வேலை ஆரம்பிப்பு முற்பணம் | 3,466.37 | 3,449.91 | 16.45 | | |

### 1.5.5 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு

2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான துணைக்கம்பனியின் (சென்ட்ரல் எஞ்சினியரிங் சேர்வீசஸ் (பிறைவேட்) லிமிட்டட்) நிதிக்கூற்றுக்கள் மீது பின்வரும் அவதானிப்புக்களின் அடிப்படையில் என்னால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பிரிவின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 378.08 மில்லியன் குறைத்து எழுதப்பட்ட பெறுமதியுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்தரு பொருளாதார ஆயுட்காரலம் வருடாந்தம் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை பிரித்து மதிப்பிட திட்டமிடப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தளங்கள் மற்றும் பிரதான தளங்களின் உப அலகுகளுக்கு இடையே ஏற்பட்ட ரூபா 159.9 மில்லியன் மொத்த உள்ளக கொடுக்கல்வாங்கல்கள் நீக்கப்படாமலேயே நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. மேலும், தள அலுவலகங்களுக்கிடையிலான உள்ளக கொடுக்கல்வாங்கல்களின் மூலம் ஈட்டப்பட்ட ரூபா 56.78 மில்லியன் தொகையானது கம்பனியின் வருடாந்த வருமானம் மற்றும் செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு குறைந்த கால அவகாசம் இருப்பதால், சில பொருட்களை அகற்றுவது சாத்தியமில்லை. ஐந்தொகை தொடர்பான மீதிகள் இந்த ஆண்டில் விசாரணை செய்யப்பட்டு அதற்கேற்ப நீக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தள அலுவலகங்கள் மற்றும் பிரிவுகளுக்கு இடையிலான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் மீதிகள் நீக்கப்பட வேண்டும். |
| (இ) | வியாபார கடன்பட்டோர், பெறவேண்டிய நிறுத்திவைத்தல் பணம், நானாவித கடன்பட்டோர், வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் தொடர்பாக தாய்க் கம்பனி அதாவது மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தினால் (CECB) காட்டப்பட்ட உரிய செலுத்த வேண்டிய மீதிகளான முறையே ரூபா 1,299.37 மில்லியன், ரூபா 2,080.10 மில்லியன், பூச்சிய பெறுமதி மற்றும் ரூபா 3,466.37 மில்லியனை கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 1,286.66 மில்லியன், ரூபா 2,027.33 மில்லியன், ரூபா 13.30 மில்லியன் மற்றும் ரூபா 3,449.91 மில்லியன் நேரொத்த மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 12.71 மில்லியன், ரூபா 52.77 மில்லியன், ரூபா 13.30 மில்லியன் மற்றும் ரூபா 16.45 மில்லியன் தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது விலைப்பட்டியல்களைச் சரியாக ஒப்பிடாதது போன்ற காரணங்கள் இதற்குப் பங்களித்துள்ளன. | பெறவேண்டிய மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு செலுத்த மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ரம்பகனோயா செயற்திட்டத்தின் கீழ் 2023 திசெம்பர் 31 வரை ரூபா 18.02 மில்லியன் கிரயமான கோழிக்குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அது உயிரியல் சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் இலங்கைகணக்கீட்டு நியமம் 41 இன் 12 ஆம் பந்திக்கு முரணாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் இது காட்டப்பட்டுள்ளது. | எதிர்வரும் நிதியாண்டில் அனைத்து உயிரியல் சொத்துக்களும் இலங்கை கணக்கீட்டு நியம இல. 41 இன் பிரகாரம் நியாயமான பெறுமதியில் வெளிப்படுத்தப்படும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தொகை ரூபா. மில் | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பண மீதிகள்<br>- பத்தரமுல்லை<br>- தெற்கு | <br><br><br>35.16<br>18.32 | பொறியியல் பெறுகை நிர்மாண (EPC) பிரிவின் செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பண மீதிகளிற்கான விரிவான தகவல். | முகாமைத்துவ கருத்துரை வழங்கப்படவில்லை. | விரிவான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023.12.31 இல் உள்ளவாறு WP-2 தள அலுவலகத்தில் பெறவேண்டிய வியாபார மீதி | 55.01 | ஜாவத்த தள அலுவலகத்தில் 13 செயற்திட்டங்கள் மற்றும் கட்டுபெத்த தள அலுவலகத்தில் 08 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 55.01 மில்லியன் நிலுவையாக உள்ள மீதிகள் தொடர்பான செயற்திட்டத் தகவல் அல்லது ஏனைய எழுத்துமூல சான்று. | 5 ஆண்டுகளுக்கும் மேலாக பெறவேண்டிய வியாபார மிதிகளை கொண்ட செயற்திட்டங்களுக்கு, 2023 நவம்பர் 10 ஆம் திகதிய பதில் கடிதத்துடன் எழுத்துமூல சான்று/ உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட்டது. | கணக்காய்விற்கு செயற்திட்டத் தகவல் மற்றும் ஏனைய எழுத்துமூல சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (இ) | ஜாவத்த மற்றும் கட்டுபெத்த தள அலுவலகங்களில் செயற்திட்டங்கள் தொடர்பான நிறுத்திவைத்தல் பணம் | 7.16 | நிறுத்திவைத்தல் பண மீதிகள் தொடர்பான பட்டியல்கள் | களஞ்சியத்தில் மழைநீர் தேங்கியதால் செயற்திட்டத்திற்கு சொந்தமான D1256 கோவை அழிந்துள்ளது. D1166 மற்றும் D1180 செயற்திட்டங்களுடன் தொடர்புடைய நிறுத்திவைத்தல் பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுத்திவைத்தல் பணம் மற்றும் கடன்பட்டோர் மீதிகள் தனித்தனியாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | நிதிப் பிரமாணங்கள் - 104(3)(4) இன் பிரகாரம் 6 வாகன விபத்துக்கள் தொடர்பாக ஏற்பட்ட சேதங்கள் | 1.93 | வாகன விபத்துகள் தொடர்பான கோவைகள் மற்றும் காப்புறுதி இழப்பீடு பற்றிய தகவல்கள் | எதிர்காலத்தில் இந்த விபத்து பதிவேடு தொடர்புடைய கோவைகளுடன் வழங்கப்படும். | நிதிப் பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு துணைக்கம்பனியிடமிருந்து பணியகம் ரூபா 1,545.96 மில்லியனைப் பெற வேண்டும், மேலும் இந்த பெறுமதியில் வாகன வாடகைக் கட்டணங்கள், நிலையான சொத்து வாடகைக் கட்டணங்கள் மற்றும் பங்குச் சந்தைகள் மற்றும் தற்காலிகக் கடன்கள் ஆகியவை உள்ளடங்குகிறது. எனினும், இந்த கொடுக்கல்வாங்கலகள் தொடர்பாக பணியகத்திற்கும் துணைக்கம்பனிக்கும் இடையில் சரியான மற்றும் புதுப்பித்த உடன்படிக்கைகள் இல்லாததாலும், இந்த மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்படாததாலும், 2017 ஆம் ஆண்டிலிருந்து இந்த மீதி தொடர்ந்து அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | பணிப்பாளர் சபையின் ஆலோசனையின் பேரில், கம்பனிகளுக்கு இடையேயான மீதிக்கு எவ்வளவு காலம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்து கருத்து தெரிவிப்பதற்கு CECB, ஆலோசனை நிறுவனத்திடம் பணியை ஒப்படைத்துள்ளது.<br><br>அதன் பிரகாரம் சபை அங்கீகாரத்துடன் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு உத்தேசித்துள்ளோம். | இந்த மீதியை உடனடியாகத் தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் பணியகத்தின் மொத்த கடன்பட்டோர் மீதி ரூபா 4,549.28 மில்லியனாக இருந்ததுடன் அந்தக் கடன்பட்டோரின் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் நீண்ட கால கடன்பட்டோர் உள்ளனர். பொறியியல் பெறுகை நிர்மாண (EPC) பிரிவில் 3 - 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட நிலுவை மீதிகள் மற்றும் 5 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக உள்ள மீதிகள் முறையே ரூபா 246.90 மில்லியன் | கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது கடன்பட்டோர் மீதி ரூபா 5,300 மில்லியனில் இருந்து ரூபா 4,500 மில்லியனாக குறைவடைந்துள்ளது. மேலும், எமது நிறுவனம் கடன் மீதி தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்ந்து கலந்துரையாடி வருகிறது. மேலும், உள்ளக பிரிவுகள் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் குழுவால் அவ்வப்போது பின்பற்றப்படுகின்றன. | பணியகத்தின் நிதி நடைமுறைகள் கையேட்டின் பிரகாரம் கடன் அறவீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் ரூபா 1,280.46 மில்லியன் ஆக இருந்ததுடன் பொறியியல் பெறுகை நிர்மாண (EPC) பிரிவின் ரூபா 2,425.99 மில்லியன் மொத்த கடன்பட்டோர் மீதியுடன் ஒப்பிடும் போது இது 63 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. மேலும், ஆலோசனைப் பிரிவில் 3-5 வருடங்களிற்கு இடைப்பட்ட கடன்பட்டோர் மீதிகள் மற்றும் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதிகள் முறையே ரூபா 270.48 மில்லியன் மற்றும் ரூபா 356.54 மில்லியன் ஆகும். இது ஆலோசனை பிரிவின் ரூபா 2,116.54 மில்லியன் மொத்த கடன்பட்டோர் மீதியுடன் ஒப்பிடும் போது 30 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. பணியகத்தின் நிதி நடைமுறைகள் கையேட்டின் பிரகாரம் பெறவேண்டியவைகள் முகாமைத்துவ செயன்முறைகள் பணியகத்தின் காசுப்பாய்ச்சல்களை பேணுவதற்கு முன்வைக்கப்படாததுடன் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுடன் உரிய காலத்தில் பணியகத்தின் பெறவேண்டியவைகளை சேகரிக்கத் தவறியது ”அறவிடமுடியாக் கடன்களுக்கு” வழிவகுத்தது. | | |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் பணியகத்தின் மொத்த கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,874.15 மில்லியனாக இருந்ததுடன் அந்தக் கடனகொடுத்தோரின் வயது பகுப்பாய்வின் பிரகாரம், நீண்டகாலமாக நிலுவையாக உள்ள கடன்கொடுத்தோர் இருந்தனர். பொறியியல் பெறுகை நிர்மாண (EPC) பிரிவின் 3-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட நீண்டகால கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட கடன்கொடுத்தோர் மீதிகள் முறையே ரூபா 219.18 | EPC பிரிவின் மூலம் CESL இற்கு செயற்திட்டங்கள் ஒதுக்கப்பட்டதன் காரணமாக, CESL அதிக கடன் மீதியைக் கொண்டுள்ளது. மேலும் EPC பிரிவு CECB இற்கு பணத்தைப் பெற்ற பின்னரே கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்யும். எனவே, அந்த கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பான கடன்பட்டோர் மீதிகள் எமது கணக்குகளில் காட்டப்படுகின்றன, மேலும் அந்த கடன்கொடுத்தோர் மீதிகளின் கொடுப்பனவில் எந்த ஆபத்தும் காணப்படவில்லை. ஆலோசனைப் பிரிவின் | பணியகத்தின் நிதி நடைமுறைகள் கையேட்டின் பிரகாரம் கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மில்லியன் மற்றும் ரூபா 767.83 மில்லியன் ஆகும். பொறியியல் பெறுகை நிர்மாண (EPC) பிரிவின் ரூபா 1,808.68 மில்லியன் மொத்தக் கடன்கொடுத்தோர் மீதியுடன் ஒப்பிடும் போது இது 55 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. மேலும், ஆலோசனைப் பிரிவின் 3-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட கடன்கொடுத்தோர் மீதிகள் முறையே ரூபா 2.92 மில்லியன் மற்றும் ரூபா 39.03 மில்லியன் ஆக இருந்ததுடன் ஆலோசனை பிரிவின் ரூபா 59.18 மில்லியன் மொத்த கடன்கொடுத்தோர் மீதியுடன் ஒப்பிடும் போது இது 70 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. செலுத்த வேண்டிய அனைத்து கணக்குகளையும் உரிய காலத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு பணியகம் செலுத்த வேண்டிய கணக்கு முகாமைத்துவ நடைமுறைகளை பின்பற்றாததே இந்நிலைமைக்கு வழிவகுத்தது. | கடன்கொடுத்தோர் மீதிகள் முற்பணத்தைப் பெற்று பின்னர் செயற்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்ட மீதிகளாகும், இது தொடர்பில் உரிய அமைச்சுக்களுக்கு நினைவூட்டல்கள் அனுப்பப்பட்ட போதிலும் இதுவரை உரிய பதில் பெறப்பட்டிருக்கவில்லை. |

### 1.6.3 முற்பணங்கள்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவக் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பணியகத்தின் நிதி நடைமுறைகள் கையேட்டின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் முற்பணங்கள் உரிய திகதிகளில் செலுத்தப்பட வேண்டும். 2023 திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பணியகத்தின் 3 பிரிவுகள் தொடர்பாக ரூபா 4.83 மில்லியன் கூட்டுமொத்த முற்பண மீதி இருந்த போதிலும் அதன் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் பணியகத்தின் தலைமை அலுவலகத்தில் ரூபா 1.80 மில்லியன், பொறியியல் பெறுகை நிர்மாண பிரிவில் ரூபா 1.03 மில்லியன் மற்றும் ஆலோசனைப் பிரிவில் ரூபா 0.0143 மில்லியன் என மொத்தம் ரூபா 2.84 மில்லியன் 1 வருடத்திற்கும் மேலாக | எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | பணியகத்தின் நிதி நடைமுறைகள் கையேட்டின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கைகள் இருக்க வேண்டும். |

நிலுவையாக இருந்ததுடன் மொத்த முற்பண பெறுமதியுடன் ஒப்பிடும் போது இது 59 சதவீதத்தை குறிக்கிறது.

**1.7 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 இன் 16 ஆம் இலக்க தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 (2) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகம் 1996 முதல் 2007 வரையிலான காலப்பகுதியில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ரூபா 49.59 மில்லியன் கூட்டுமொத்தமான வருமான வரி, வற், சென்றால் பணம் செலுத்துதல் (pay-as-you-go) மற்றும் ஏனைய வகை வரிகள் மற்றும் தண்டப்பணங்களை செலுத்தத் தவறியிருந்தது. | ரூபா 20 மில்லியன் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள வரித் தொகையானது உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடனான பேச்சுவார்த்தையுடன் உரிய காலத்தில் செலுத்தப்படும். | செலுத்தப்படாத வரிகளை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 747.54 மில்லியன் தொகையான வரிக்கு முன்னரான இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 69.39 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 678.15 மில்லியன் தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானம் மற்றும் நிதி வருமானம் அதிகரித்தமை இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும்.

**2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வு, அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | 2023 திசெம்பர் 31 இல் முடியவடந்த ஆண்டிற்கானது ரூபா. மில்லியன் | 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது ரூபா. மில்லியன் | முரண் {சாதகமானது/ (பாதகமானது)} ரூபா. மில்லியன் | சதவீதம் % |
|---|---|---|---|---|
| <u>வருமானம்</u> | | | | |
| நிர்மாணம் | 4,008 | 2,747 | 1,261 | 45.9 |
| ஆலோசனை | 1,494 | 1,747 | (253) | (14.5) |
| **ஏனைய வருமானம்** | | | | |
| நானாவித வருமானம் | 57.18 | 83.59 | (26.41) | (31.6) |
| வாடகை வருமானம் | 55.04 | 12.14 | 42.9 | 353.4 |
| நிதி வருமானம் | 896.76 | 459.64 | 437.12 | 95.1 |
| <u>செலவினம்</u> | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| நிர்வாக செலவினங்கள் | 577.79 | 602.86 | 25.07 | 4.16 |
| விற்பனை மற்றும் பங்கீட்டு செலவினங்கள் | 0.60 | 390.45 | 389.85 | 99.8 |
| நிதி கிரயம் | 3.65 | 3.60 | (0.05) | (1.4) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 4,067.71 மில்லியன் மற்றும் ரூபா 4,382.1 மில்லியன் தொகையான முறையே நிதி வளமூலங்கள் மற்றும் நிலையான சொத்துகளைப் பயன்படுத்தி பணியகத்தின் வருமானத்தை அதிகரிப்பதில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படவில்லை.

(ஆ) நிர்மாண நடவடிக்கைகளுக்காக அதன் துணைக்கம்பனியை அமைத்த பின்னரும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான பொறியியல் பெறுகை நிர்மாண (EPC) பிரிவை தொடர்ந்து முறையே ரூபா 303 மில்லியன் செயற்பாட்டு நட்டம் மற்றும் ரூபா 74.73 மில்லியன் செயற்பாட்டு இலாபத்தின் கீழ் நடாத்த வேண்டியதன் அவசியம் குறித்து முகாமைத்துவம் அதிக கவனம் செலுத்தவில்லை.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பணியகத்தின் முக்கிய சில கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| **விகிதங்கள்** | **2023** | **2022** | **2021** |
|---|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | **சதவீதம்** | **சதவீதம்** | **சதவீதம்** |
| மொத்த இலாப விகிதம் (GP) | 4.25 | 10.17 | 10.88 |
| செயற்பாட்டு இலாப விகிதம் | 2.65 | (8.60) | (2.01) |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ROA) | 4.19 | 0.39 | 0.27 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | | |
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1.2: 1 | 1.2 : 1 | 1.2 : 1 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1.2 : 1 | 1.2 : 1 | 1.2 : 1 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

பணியகம் ரூபா 17,827 மில்லியன் தொகையான அதன் மொத்த சொத்து அடிப்படையை பயன்படுத்தியதன் மூலம் மீளாய்வாண்டில் ரூபா 747 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை பெற்றுள்ளது, இது சொத்து மீதான திரும்பல் விகிதத்தின் அடிப்படையில் 4.19 மாத்திரமே ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவக் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | பணியகம் கொழும்பு 07, சரண வீதியில் உள்ள 15 உத்தியோகபூர்வ விடுதிகளில், 05 உத்தியோகபூர்வ விடுதிகளான இல. சி, இல. டி - 7, இல. எம், இல. ஏ - 1, இல. ஏ - 4 என்பன வெளித் தரப்பினரால் | பணியகத்தின் சரண வீதி உத்தியோகபூர்வ விடுதி வளாகத்தில், வெளித் தரப்பினருக்கு உத்தியோகபூர்வ விடுதிகள் ஒதுக்கப்படுவது வரிசை அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில் | பணியக உத்தியோகத்தர்கள் குடியிருப்பதற்காக மாத்திரம் விடுதிகளை ஒதுக்குவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படுகின்றதுடன் பணியகம் வெளி தரப்பினருக்கு விடுதிகளை வழங்குவதற்கான அங்கீகரிக்கப்பட்ட முறைமையை கொண்டிருக்காததுடன் உத்தியோகபூர்வ விடுதிகளை வழங்குவதில் பணியகம் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்படுகிறது. தற்போது சரண வீதியில் உள்ள உத்தியோகபூர்வ விடுதி வளாகத்தில் 05 உத்தியோகபூர்வ விடுதிகள் வெளித் தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளன. | ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 21 ஆம் திகதிய இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் டிஎல்/10/02/07 - x ஆம் இலக்க கடிதம் மற்றும் 2020 நவம்பர் 19 ஆம் திகதிய இலங்கை மகாவலி அதிகாரசபை வதிவிட முகாமையாளரின் ஆர்பிஎம்/ஆர்ஓ/எல்/சீஎல்ஓ/பிபீ/38ஆம் இலக்க கடிதம் ஆகியவற்றின் மூலம் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான அம்பாறை மாவட்டத்தின் ரம்பகனோய மகாவலி வலயத்தில் பொல்லே பெத்த மகாவலி பிரிவில் உள்ள 150 ஏக்கர் காணி கலப்பு விவசாய செயற்திட்டத்திற்காக பணியகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 2024 ஏப்ரல் 30 வரை, நீண்டகால குத்தகை அடிப்படையில் காணியை சுவீகரிப்பதற்கான முறையான குத்தகை உடன்படிக்கையை பணியகம் ஏற்படுத்தியிருக்கவில்லை. | இலங்கை மகாவலி அதிகாரசபையின் கடிதத்தின் பிரகாரம் நீண்டகால குத்தகைஉடன்படிக்கை இன்னும் இறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. | நீண்டகால குத்தகை உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பணியகத்திற்குச் சொந்தமான துணைக்கம்பனியின் அனுராதபுர செயற்பாட்டு அலுவலகத்தில், 2016 சனவரி 01 முதல் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேட்டைக் கருத்தில் கொண்டு, அப்போது பிரதம செயற்பாட்டு பொறியியலாளராகக் கடமையாற்றிய உத்தியோகத்தர் 2021 சனவரி 11 முதல் 2020 யூன் 22 வரை பணி இடைநீக்கம் செய்யப்பட்டார். 2021 மே 24 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் மீண்டும் பணியகத்தின் ஊழியராக நியமிக்கப்பட்டார், ஆனால் அவர் தொடர்பான விசாரணை 2024 ஏப்ரல் 30 அளவில் பூர்த்தி | செயற்பாட்டு பொறியியலாளராகப் பணியாற்றிய உத்தியோகத்தர் CESL இற்கு நியமிக்கப்பட்டுள்ளதால், இது தொடர்பான விசாரணையை CESL மேற்கொண்டு வருகிறது. | விசாரணையை விரைவாக பூர்த்தி செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்காததுடன் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறியியல் பெறுகை நிர்மாண (EPC) பிரிவின் மொத்த அறவிடப்படக்கூடிய வைப்பு மீதி ரூபா 5.79 மில்லியனாக இருந்ததுடன் அதன் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம், அந்த மீதியில் 90 சதவீதம் அதாவதுரூபா 5.25 மில்லியன் 5 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளது. அதில் 100 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்ட 21 செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 3.23 மில்லியன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த பணம் புதிய மின்சாரம் மற்றும் நீர் இணைப்புக்களை பெற்றுக்கொள்வதற்கும், குடிநீரை பெற்றுக்கொள்வதற்கும், வாகனங்களை வாடகைக்கு எடுப்பதற்கும் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்படும். | உரிய நோக்கத்தை அடைந்த பின்னர், அதனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில், பணியகம் அதன் மொத்த செயற்பாடுகளிலிருந்து ரூபா 145.57 மில்லியன் நட்டத்தை பதிவு செய்துள்ளது. மேலும், பணியகத்தின் மூன்று முக்கிய பிரிவுகளான ஆலோசனைப் பிரிவு, சர்வதேசப் பிரிவு மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவற்றில் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில், அந்தப் பிரிவுகளின் செயற்பாட்டு முடிவுகள் முறையே ரூபா 216.09 மில்லியன், ரூபா 13.38 மில்லியன் மற்றும் ரூபா 4.40 மில்லியன் செயற்பாட்டு நட்டங்களை பதிவு செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | நாட்டின் பொருளாதார வீழ்ச்சி, நமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது, பணியகத்தின் செயலாற்றலை மோசமாக பாதித்துள்ளது. | பணியகத்தின் அனைத்து பிரிவுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அதிகபட்ச இலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பொறியியல் பெறுகை நிர்மாண (EPC) பிரிவின் நிதிக்கூற்றின் பிரகாரம் அதன் கீழ் உள்ள 14 பிரிவுகளில் 07 பிரிவுகள் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ரூபா 54.85 மில்லியன் ஒட்டுமொத்த செயற்பாட்டு நட்டத்தை பதிவு செய்துள்ளன. | இயந்திரங்களின் நிர்வாகச் செலவில் போதிய அளவு அதிகப்படியான பெறுமானத்தேய்வு சேர்க்கப்படாததால் செயற்பாட்டு நட்டம் ஏற்பட்டுள்ளது. | பொறியியல் பெறுகை நிர்மாண (EPC) பிரிவில், செயற்பாட்டு நட்டத்தை உருவாக்கும் தளங்களை இலாபமாக மாற்றுவதற்கு முயற்சிகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 வரை பொறியியல் பெறுகை நிர்மாண (EPC) பிரிவின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் இலாபத்தை மதிப்பிடும் போது, அந்த பிரிவின் கம்பஹா, ஊவா, மத்திய, அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய 05 தளங்கள் 2020 இல் ரூபா 41.54 மில்லியன், 2021 இல் ரூபா 39.99 மில்லியன், 2022 இல் ரூபா 88.97 மில்லியன் மற்றும் 2023 இல் ரூபா 47.26 மில்லியன் தொகையான மொத்த செயற்பாட்டு நட்டத்தை தொடர்ச்சியாக அறிக்கையிட்டுள்ளன. | நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வாக நிர்மாண செயற்திட்டங்களை நிறுத்துவதற்கான அரசாங்கத்தின் முடிவிற்குப் பின்னர், மந்தநிலை, இடைநிறுத்தம் மற்றும் சில சந்தர்ப்பங்களில் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தம் என்பன EPC பிரிவை மோசமாக பாதித்தன. | பொறியியல் பெறுகை நிர்மாண (EPC) பிரிவில், தொடர்ந்து நட்டத்தில் இயங்கும் தளங்களை இலாபமாக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | பொறியியல் பெறுகை நிர்மாண (EPC) பிரிவின் இரண்டு கிளைகளான ஊவா மற்றும் கந்தளே ஆகிய இரண்டும் மீளாய்வாண்டில் எந்தவிதமான வருமானத்தையும் ஈட்டியிருக்காததுடன் முறையே ரூபா 12.66 மில்லியன் மற்றும் ரூபா 1.52 மில்லியன் நிர்வாகச் செலவினங்களை மேற்கொண்டிருந்தன. | ஊவா மற்றும் கந்தளாய் ஆகிய இரு தள அலுவலகங்களின் செயற்பாடுகளும் அம்பாறை தலைமை அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுவதால், தற்போது நடைபெற்று வரும் செயற்திட்டங்களின் செயற்பாட்டு வருமானம் அம்பாறை தள அலுவலக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. | இலாப நட்டத்தைக் காட்டும் தனியான கணக்குகள் பேணப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைப் பிரிவின் நிதிக்கூற்றின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் ஆலோசனைப் பிரிவின் மொத்த நடவடிக்கைகளில் இருந்து ரூபா 216.09 மில்லியன் மொத்த நட்டத்தை ஆலோசனைப் பிரிவு பதிவு செய்துள்ளதுடன் ஆலோசனைப் பிரிவில் உள்ள 22 கிரய நிலையங்களில், 14 ரூபா 305.49 மில்லியன் கூட்டுமொத்தமான நட்டம் ஏற்பட்டுள்ளதென தெரிவித்துள்ளது. | நாட்டின் தற்போதைய பொருளாதார மந்தநிலை காரணமாக, நிர்மாண கைத்தொழிலின் சரிவு மற்றும் பொதுத் துறையில் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டமை என்பன வருமானம் குறைவடைவதற்கு வழிவகுத்ததுடன் செலவினமானது வருமானம் குறைவடையும் விகிதத்தில் குறைவடையாதமை காரணமாகும். | இலாபகரமான நிலையை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2020 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 வரை ஆலோசனைப் பிரிவின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் இலாபம் மற்றும் நட்டத்தை மதிப்பிடும் போது இந்தப் பிரிவில், டி1, டி3, | நாட்டின் தற்போதைய பொருளாதார மந்தநிலை காரணமாக, நிர்மாணக் கைத்தொழிலின் சரிவு மற்றும் பொதுத் துறையில் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டமை | ஆலோசனை பிரிவில் தொடர்ந்து நட்டத்தை சந்தித்து வரும் கிரய |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடக்கலை (Archi) மற்றும் தெற்கு ஆகிய 04 கிரய நிலையங்கள் 2020 ஆம் ஆண்டில் ரூபா 195.09 மில்லியன், 2021 ஆம் ஆண்டில் ரூபா 83.83 மில்லியன், 2022 ஆம் ஆண்டில் ரூபா 175.52 மில்லியன் மற்றும் 2023 ஆம் ஆண்டில் ரூபா 159.71 மில்லியன் ஒட்டுமொத்த செயற்பாட்டு நட்டங்களை தொடர்ச்சியாக பதிவு செய்திருந்தன. | என்பன வருமானம் குறைவடைவதற்கு வழிவகுத்திருந்ததுடன் வருமானம் குறைவடையும் விகிதத்தில் செலவினம் குறைவடையாதமை காரணமாகும். | நிலையங்களை இலாபகரமான நிலைக்கு கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைப் பிரிவின் நிதிக்கூற்றின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில், டி1, டி3, வீதி, கட்டிடக்கலை (Archi), NRM&LS, J&PW, அம்பாறை (தென்கிழக்கு), கிழக்கு ஆகிய பிரிவுக்கு சொந்தமான 08 கிரய நிலையங்களில் மீளாய்வாண்டில் விற்பனை கிரயத்தை கூட ஈடுசெய்யும் அளவுக்குப் போதுமான வருமானத்தை ஈட்டாததுடன் முறையே ரூபா 16.19 மில்லியன், ரூபா 3.89 மில்லியன், ரூபா 6.89 மில்லியன், ரூபா 50.86 மில்லியன், ரூபா 8.13 மில்லியன், ரூபா 53.53 மில்லியன், ரூபா 1.71 மில்லியன் மற்றும் ரூபா 1.06 மில்லியன் மொத்த நட்டங்கள் பதிவாகியுள்ளன. | நிர்மாண கைத்தொழிலின் மந்தநிலை மற்றும் வீழ்ச்சி என்பன பொதுத் துறையில் நிர்மாண செயற்திட்டங்கள் நிறுத்தப்படுதலிற்கு வழிவகுத்திருந்தன. | ஆலோசனைப் பிரிவின்கிரய நிலையங்கள் இலாபம் ஈட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஏ) | சர்வதேச பிரிவு மீளாய்வாண்டில் எந்தச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளாததுடன் 2021 முதல் 2023 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில், இந்த சர்வதேச பிரிவு எந்தவொரு வருமானத்தையும் ஈட்டியிருக்கவில்லை. | சர்வதேச வருமானம் சர்வதேச பிரிவில் காட்டப்படவில்லை, ஆனால் ஏனைய ஆலோசனை பிரிவுகள் ஏற்கனவே சர்வதேச செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தி 2023 இல் வருமானத்தை ஈட்டியுள்ளன. | சர்வதேச பிரிவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | பணியகத்தின் WP-2 தள அலுவலக ஆலோசனைப் பிரிவின் வருமானம் முக்கியமாக வெளிப்புற ஆலோசனை நடவடிக்கைகள் மற்றும் மருத்துவமனை பராமரிப்பு தொடர்பான ஆலோசனை மூலம் உருவாக்கப்படுகிறது. நாட்டில் நிலவும் சூழ்நிலை மற்றும் நிர்மாண கைத்தொழிலின் சரிவு காரணமாக, தள அலுவலகத்தின் ஆலோசனைப் பிரிவின் நாளாந்த | சனவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் யூன் மாதங்களில் காசுப்பாய்ச்சல்கள் எதிர்மறை மீதிகளாக காணப்பட்ட போதிலும் ஒட்டுமொத்த காசு மீதி நேர்மறையான காசுப்பாய்ச்சலாகும். மேலும் செய்த வேலையின் அடிப்படையில் பணம் பெறப்படுகிறது. எனவே, காசுப்பாய்ச்சல் ஒவ்வொரு | வருமானத்தைப் அதிகரிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மேந்தலை கிரயங்களை ஈடுசெய்வதில் WP-2 பெரும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டது. | மாதமும் நிலையாக இல்லாமல் மற்றும் மாறுபடுகிறது. |

**3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 19 – 9681, 31 – 3052, GA – 9776, KF – 5300 மற்றும் KE – 1632 ஆகிய இலக்கங்களைக் கொண்ட பணியகத்திற்குச் சொந்தமான 5 வாகனங்கள் 1-3 வருடங்களாகப் பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், அந்த வாகனங்களை கைதவிப்பு செய்வதற்கு 2024 ஏப்ரல் 30 வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 5 வாகனங்களையும் கைதவிர்ப்பு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | பணியகத்தின் பணிக்கு பயன்படுத்த முடியாவிட்டால், அது கைதவிப்பு செய்யப்பட வேண்டும். |

**3.4 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் 6.8 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் தமது செயற்பாடுகளைச் செய்வதற்கு அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களின் வளங்களைப் பயன்படுத்தக்கூடாது. எனினும், 1990 சனவரி 22 இல் பணியகத்திற்கு சொந்தமான ரூபா 3 மில்லியன் பெறுமதியான கொழும்பு ரீ.பீ.ஜெயா மாவத்தையில் (டாலி வீதி) உள்ள பணியகத்தின் 02 றூட்கள் 24.5 பேர்ச்சஸ் காணி (ரூபா 575 மில்லியன் பெறுமதி) 2023 இன் இறுதிவரை வருமானம் ஈட்டாமல் எந்தவொரு செயற்திறனான பொருளாதார நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் நீர்ப்பாசன அமைச்சின் தலைமை அலுவலகத்திற்கான வாகன நிறுத்துமிடமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | இல. 500, ரீபீ ஜெயா மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தின் வாகன நிறுத்துமிடமாக இக்காணி தற்போது பயன்படுத்தப்படுவதால், இது தொடர்பில் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களில் பலமுறை கலந்துரையாடப்பட்டு எதிர்காலத்தில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. | இந்த காணியை செயற்திறனான பொருளாதார நோக்கங்களுக் காக பயன்படுத்துவதி ல் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான செயற்பாட்டு கையேட்டின் 3.2 (i) ஆம் பந்தியின் பிரகாரம் பணியகத்தில் பணியாற்றும் அனைத்து நிலைகளிலும் உள்ள அனைத்து பதவிகளுக்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் இருக்க வேண்டும். எனினும், 2016 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு திகதியான 2024 ஏப்ரல் 30 வரை பணியகத்தின் நடுத்தர முகாமைத்துவ நிலை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ நிலைகளுக்காக 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்தை பணியகம் அங்கீகரித்திருக்கவில்லை. | நீர்ப்பாசன அமைச்சு பணியகத்தின் மத்திய முகாமைத்துவ நிலை (MM-1-1) மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ நிலை (HM 1-1, HM 1-3, HM 2-3) ஆகியவற்றிற்கான முன்மொழியப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளை 2022.10.31 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்துள்ளது. மாதிரி படிவத்தின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளை தயாரித்து சமர்ப்பிக்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. | பணியகத்தின் அனைத்து நிலைகளிலும் உள்ள பதவிகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் விரைவாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 13 அதிகாரிகள் 2007 மற்றும் 2022 திசெம்பர் 31 இற்கு இடையில் பணியகத்துடன் ரூபா 18.15 மில்லியன் பெறுமதியான பிணைமுறி உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்ததுடன் 2024 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு ரூபா 8.30 மில்லியன் தொகையானது செலுத்த தவறிய அதிகாரிகளால் பணியகத்திற்கு செலுத்தப்படாதிருந்தது. | முகவரிகளை கண்டுபிடிப்பதற்கு உதவி கோரி குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், 3 அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், 3 அதிகாரிகள் தவணை முறையில் நிலுவைகளை செலுத்தி வருகின்றனர். | பிணைமுறிகளை மீறிய அதிகாரிகள் அல்லது உத்தரவாததாரர்களிடமிருந்து நிலுவைகளை அறவிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

### 3.6 வாகன அணி முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி/1/2015 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 4.1 மற்றும் 4.2 ஆம் பந்திகளின் பிரகாரம் குழுப் போக்குவரத்துக்கு குழாம் வாகனங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, | இயன்றவரை வாகனங்கள் தனிப்பட்ட அதிகாரிகளின் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படுவதில்லை. மேலும் அதிகாரிகளின் வாகனங்கள் பெரும்பாலும் குழுக்களாகவே பயன்படுத்தப்படுகின்றன. | பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தனிநபர்கள் அலுவலகத்திற்குச் செல்வதற்கும் வருவதற்கும் பயன்படுத்தியிருந்தனர். சரியான ஓட்ட அட்டவணைகள் இல்லாததால் பயணித்த தூரத்தை சரியாக பிரித்தறிய முடியவில்லை. | | |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் துணைக்கம்பனியிலிருந்து பணியகத்திற்கு மாற்றப்பட்ட ரூபா 15.25 மில்லியன் தொகையான 4 வாகனங்களின் பெறுமதி 2023 ஆம் ஆண்டு வரை பணியகத்தின் கணக்குகளில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் வாகனங்கள் 5 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் வாகனங்களின் பெறுமதிகள் மற்றும் அது தொடர்பான பெறுமானத்தேய்வு நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. வாகனங்களின் மொத்த பெறுமதி மற்றும் 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான கணக்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட வாகனங்களின் திரண்ட பெறுமானத்தேய்வு பெறுமதி என்பன குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 2019 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் கார்கள் CECB இற்கு மாற்றப்பட வேண்டும், ஆனால் அவற்றின் RMV பதிவு 2020 இல் CECB ஆல் பெறப்பட்டது. எனவே, 2020, 2021, 2022 ஆண்டுகள் தொடர்பாக கணக்கீடு செய்யப்பட்ட நிறுத்திவைக்கப்பட்ட வருமானங்கள் மூலம் 2023 ஆம் ஆண்டில் சீராக்கங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | சொத்து பரிமாற்றத்தின் போது கணக்குகளில் பெறுமதி இனங்காணப்பட வேண்டும். |
| (இ) | இல. 31 – 1776 மற்றும் இல. KF – 5300 வாகனங்கள் 2022 திசெம்பர் 31 இற்குப் பின்னர் இயங்குவதற்குப் பயன்படுத்தப்படவில்லை, மேலும் மீளாய்வாண்டில் ரூபா 0.16 மில்லியன் மற்றும் ரூபா 0.15 மில்லியன் பெறுமதியில் பழுதுபார்க்கும் பணிக்காக ரூபா 0.31 மில்லியன் மொத்த செலவினம் ஏற்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இது ஒரு சிக்கனமற்ற செலவினமாகும். மேலும், இயங்கும் நிலைக்குக் கொண்டு வர முடியாத இத்தகைய வாகனங்களுக்கு பழுதுபார்ப்புச் செலவாகப் பெரும் தொகையைச் செலவிட வழிவகுத்த காரணிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இல. 31 – 1776 வாகனம் மிகவும் பழமையான ஜீப் என்பதால் கொழும்பு துறைமுக செயற்திட்டத்தில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் திகன அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள பணியிடத்துடன் இணைப்பதற்கு உடன்பாடு காணப்பட்டுள்ளது. KF – 5300 என்பது சிறிய குறைபாடுகளுடன் இயங்கும் நிலையில் உள்ள கார் ஆகும். தற்போது, நிறுவனத்தின் நிதி நிலைமை காரணமாக, இந்த வாகனத்தின் எரிபொருள் மற்றும் ஏனைய பராமரிப்பு மிகவும் விலை உயர்ந்தது, எனவே வாகனத்தை பயன்பாட்டிலிருந்து அகற்றி கைதவிர்ப்பு செய்வதற்கு முடிவு செய்யப்பட்டது. | பொருளாதார ரீதியாக பயனுள்ள வாகனங்களுக்கு மாத்திரமே பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இல. KM – 1763 வாகனத்தின் இயந்திரம் 2021 யூலை 21 இல் பழுதடைந்து, சேவை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டதுடன் பழுதுபார்க்கும் பணிக்காக ரூபா 1.75 மில்லியன் செலவினம் ஏற்பட்டது. எனினும், பழுது ஏற்பட்டு 230 கிமீ ஓடிய பின்னர் வாகனம் மீண்டும் பழுதடைந்தது. வாகனத்தின் எஞ்சினைப் பழுதுபார்ப்பதற்காக நிறுவனத்தால் ரூபா 4.42 மில்லியன் மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த வாகனம் ஒரு வருடத்திற்கும் மேலாக பயன்படுத்தப்படாமல் விளைவற்ற நிலையில் காணப்பட்டது. | கடைசியாக அவசர எஞ்ஜின் மூடுதலுக்கு (emergency engine shutdown) கொடுக்கப்பட்ட மதிப்பீடு அதிகமாக இருந்ததால், முகாமைத்துவத்தின் தீர்மானத்தின் பிரகாரம், மற்றொரு எஞ்ஜின் கொள்வனவு செய்யப்பட்டு, பழுதுபார்ப்பதற்கான மதிப்பீட்டை சரிபார்ப்பதற்கு, வாகனம் அலுவலக கராஜிற்கு கொண்டு செல்லப்பட்டது. | பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பொருளாதார ரீதியாக பயனுள்ள முறையில் செய்யப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவக் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்கள் தொடர்பான 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கான பொறுப்பு, குறிப்பிட்ட கால இலக்குகள் மற்றும் நிதி மதிப்பீடுகள் உள்ளிட்ட 2023 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தை நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தர்க்க ரீதியிலும் விரிவாகவும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய மூலோபாயம், குறிப்பிட்ட செயற்பாடுகள் மற்றும் செயல்களை காட்டி பணியகம் தயாரித்திருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் 2027 ஆம் ஆண்டு வரை பணியகத்தின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தால் சமீபத்திய செயல்நடவடிக்கைத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

4.2 முகாமைத்துவ தகவல் முறைமையின் செயற்திறன்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்திற்குள் உள்ள அனைத்து கொடுக்கல்வாங்கல்களையும் பதிவு செய்வதற்கு E-CECB எனப்படும் கணக்கீட்டு முறைமையை பணியகம் பயன்படுத்துகிறது, மேலும் இந்த வகை கணக்கீட்டு முறைமையில் தற்போதுள்ள கட்டுப்பாடுகள் பிராந்திய மட்டத்தில் செயற்பாடுகளைத் திட்டமிட்டு செயற்படுத்தும் அத்தகைய நிறுவனத்திற்குப் போதுமானதாகவும் வலுவானதாகவும் காணப்படாதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், தள அலுவலகங்களால் பயன்படுத்தப்படும் கணக்கீட்டு முறை ஒன்றோடொன்று இணைக்கப்படாததுடன் தனிமையில் செயற்படுவதால், வழங்கப்பட்ட தகவலின் சரியான தன்மை மற்றும் நிலைத்தன்மை தொடர்பான ஆபத்து உள்ளது. கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் மற்றும் சரக்கிருப்பு வயது பகுப்பாய்வு தகவல்களை பணியகத்தின் கணக்கீட்டு முறைமையால் உருவாக்க முடியாதுள்ளதுடன் கணக்கீட்டு பதவியணியினரால் தயாரிக்கப்படுகிறது, எனவே அந்த அறிக்கைகளில் பிழைகள் மற்றும் விடுபடுதல்கள் ஏற்படும் அபாயம் உள்ளதுடன் அது நிறைய நேரத்தை எடுக்கிறது. | இந்நிலைமையைத் தவிர்ப்பதற்கு, நிதி பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகள் மிக விரைவில் ERP முறைமையை அமுல்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | ERP முறைமை உருவாக்கப்பட வேண்டும், இதனால் தேவையான அனைத்து கணக்கீட்டு மற்றும் ஏனைய தகவல்களும் பணியகத்தின் கணக்கீட்டு முறைமை மூலம் உருவாக்கப்பட முடியும். |